DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC No. 83/2024 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-6- மணி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 07.07.2025 |

**எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் சேவானூரில் குடியிருந்து கொண்டு, டெய்லர் வேலை செய்து வருகிறேன். .தேத, மாதம் நினைவில்லை, கடந்த 1 – 1/2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலையில் நான் பவானி பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள வேலா பேக்கரி முன்பு நின்று கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த போலீசார் அந்த இடத்தில் பஸ்சுக்காக காத்திருந்த பழனி என்ற ஒருவரிடம் தங்க நகைகளை பெற்றுக் கொண்டு கவரிங் நகைகளை தந்துவிட்டதாகவும், அது தொடர்பாக விசாரணை செய்ய வந்துள்ளதாகவும் கூறினார்கள். அப்போது போலீசார் சம்பவயிடத்தில் வரைபடம் வரைந்தார்கள். பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால் நானும் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகசர் அ.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள் .

**2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால், சரியல்ல. எனக்கு தெரியும். சம்பவ தினத்தன்று தான் என்னிடம் போலீசார் கையொப்பம் பெற்றார்கள் என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த ஒரு ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், போலீஸார் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.07 18:15:11 +0530

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.07 18:15:25 +0530

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.